பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 28 புதன்கிழமை 11.06.2025 அதிர்வு 311

## சிறைச்சாலை தலைமையகமே சட்டவிரோதமாகச் செயற்பட்டது

### கைதிகள் விடுப்பு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார காட்டம்




"சமூகம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் வீழ்ச்சியடைந் 04

# ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்ற போர்வையில் சிறைக் கைதிகள் 70 பேர் சட்டவிரோதமாக விடுதலை!

### கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மேலதிக சொலிசிட்டர் தெரிவிப்பு

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்ற போர்வையில் 70 கைதிகள் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்தார்.

கைதிகள் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய 04





# ராஜபக்ஷக்களை கூண்டோடு அடைக்க அநுர அரசு கங்கணம்



## பதறுகின்றார் சமல்

"கண்டபடி விசாரணைக்கு அழைத்து - பொய்யான வழக்குகளைத் தாக்கல் செய்து ராஜபக்ஷக்களையும் அவர்களின் நெருங்கிய சகாக்களையும் சிறையில் தள்ள அநுர அரசாங்கம் அயராது பாடுபடுகின்றது."

- இவ்வாறு முன்னாள் சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமல் ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படலாம் எனச் சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. 04




இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் அதன் தலைமைக்கு மற்றொரு தலைவலியாக மாறி வருகிறார் அதன் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவரும் அந்த மாவட்டத்தின் எம். பியுமான சண்முகம் குகதாசன். கட்சித் தலைமை எடுத்த முடிவுக்கு மாறாக, அதனை சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில், தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வரும் குகதாசனுக்கு எதிராக எத்தகைய ஒழுங்காற்று நடவடிக்கையை எடுப்பது என்பது குறித்து கட்சித் தலைமை பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

உள்ளூராட்சி சபைகளுக்கான மேயர், தவிசாளர் பதவிக்கு பிரேரிக்கப்படுபவர்களின் பெயரைக் கட்சி தலைமையே 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# நல்லூர் கந்தசுவாமி முன்பு தமிழ்க் கலாசாரச் சீர்கேடு!

## கீதநாத் கடும் கண்டனங்கள்

நல்லூர் கந்தசுவாமி முன்பாக LGBTQ நடைபவனி குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தனது கண்டனங்களை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“குறித்த செயற்பாடு தமிழ்க் கலாசாரம் மற்றும் சமய நெறிகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் தனி நபர்களோ அமைப்புகளோ தமது உரிமைகளுக்காக குரல் எழுப்ப முடியும். எனினும், அவர்கள் தமிழ் மக்களின் கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளை, குறிப்பாக புனிதத் தலங்களுக்கான இடங்களில் மதிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

யாழ். மக்களுக்கு மட்டுமல்லாமல் நாடு முழுவதுமான மற்றும் உலகளாவிய ரீதியிலான பக்தர்களின் புனிதத் தலமாக விளங்கும் யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக ஓரினச் சேர்க்கை மற்றும் அதுசார்ந்த தமது நம்பிக்கைகளை ஒரு குழு விளம்பரப்படுத்தும் செயல் அதிர்ச்சிகரமானதும் வெட்கக்கேடானதுமாகும்.

இந்தச் செயற்பாடானது முழுக்க முழுக்க தமிழ்க் கலாசாரத்துக்கு எதிரான ஒன்றாகவே பார்க்க வேண்டும் என்பதுடன் குறித்த செயற்பாடுகளை அரங்கேற்றும் குழுக்களுக்கு மேலைத்தேய கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளை எமது சிறுவர்கள் மீது திணிக்க முற்படும்




இரகசிய குழுக்களால் பணம் வழங்கப்படும் ஓர் இரகசிய நிகழ்ச்சி நிரல் காணப்படுகின்றது.

அண்மையில் நல்லூர் புனிதப் பிரதேசத்தில் மாமிச உணவுகளை விற்பனை செய்யும் ஓர் உணவகம் ஒன்றுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் குரல் கொடுத்ததன் காரணமாக குறித்த உணவகம் சைவ உணவைப் பரிமாறும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டது.

எனினும், குறித்த உணவகத்துக்கு எதிராகக் குரல் எழுப்பிய அனைவரும் தமிழ்க் கலாசாரம் சீரழிக்கப்படும் இந்த விவகாரத்தில் மௌனம் காப்பது வருத்தமளிக்கின்றது.

குறித்த மேலைத்தேய கலாசார நடவடிக்கைகள் எமது கலாசார மற்றும் புனிதப் பிரதேசங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் இந்தக் குழுவினரும் ஒரு சமூகத்தின் கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளை மதிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இது போன்ற கலாசாரச் சீரழிவு நடக்கும் போது நாம் மௌனித்து இருக்க நாம் எந்தவொரு அமைப்பிடமும் விலை போகவில்லை. தமிழ்க் கட்சிகள் இதனைக் கண்டிக்கத் தவறினால் எமது அடுத்த தலைமுறை சீர்கெட்டு விடும்.

உண்மையான மற்றும் உணர்வுபூர்வமான மாற்றுப் பாலினத்தவர்கள் வானவில் சமூகத்துடைய செயற்பாடுகளுக்கு அப்பால் இருந்து வருவதே நிதர்சனமாகும் எனும் நிலையில், இந்தச் சீர்கேட்டை கண்டிக்கத் தவறி விட்டு உணவகங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது அர்த்தமற்ற ஒரு செயற்பாடாகும்.” – என்றுள்ளது.






# வீரகெட்டியவில் 110 கிலோ ஹெரோயின் கைப்பற்றல்

வீரகெட்டிய, அதுபொதே பகுதியில் கறுவாத்தோட்ட காணியிலிருந்து 110 கிலோ 460 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

தங்காலை பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீடொன்று நிர்மாணிக்கப்பட்டு வரும் கறுவாத்தோட்டத்துடன் கூடிய காணி யிலிருந்தே மேற்படி ஹெரோயின் தொகை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பொது மன்னிப்பை முறைகேடாக பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் நீதியமைச்சினால் விசாரணை

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி கைதியொருவரை விடுதலை செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் நீதியமைச்சினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் பிரத்தியேக விசாரணை நடத்தப்படும் என நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் தவிர்ந்த ஏனைய அதிகாரிகள் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய நேற்று முன்தினம் இரவு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தை பணிநீக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி பொது மன்னிப்பை சட்ட விரோதமாக பயன்படுத்தி கைதியொருவர் விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் செயற்பாட்டு ஆணையாளர் காமினி பி.திசாநாயக்க நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது.

இதனிடையே, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அனுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்ன இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கும் என்று அறிவுறுத்தப்பட்டு, அது மற்றைய எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போது, அதனை மீறி, தம்பாட்டில் பிரதேச சபைகளில் தெரிவான உறுப்பினர்களிடையே தேர்தல் நடத்தி, மேயர், தவிசாளர் பதவிகளுக்கு நிறுத்தப்படுபவர்களை தெரிவு செய்யும் நடவடிக்கையை குகதாசன் கட்சித் தலைமையின் முடிவையும் மீறி மேற்கொண்டு வருகிறார்.

திருகோணமலையில் ஏற்கனவே இரண்டு சபைகளுக்கு அவ்வாறு தெரிவுகளை நடத்தி குகதாசன் குழப்பம் ஏற்படுத்தியிருக்கும் நிலையில், மூன்றாவது சபைக்கு ஒரு தவிசாளரின் பெயரை கட்சி தலைமை குறிப்பிட்டு, எழுத்து மூலம் அவருக்கு அறிவித்த பின்னர், அந்த இன்னொரு சபைக்கும் அத்தகைய 'திருவிளையாடலை' கட்சித் தலைமையின் எழுத்துமூல வழிகாட்டலையும் உதாசீனப்படுத்தி, குதாசன் முன்னெடுத்திருக்கின்றார்.

இப்போது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கான தலைவர் பதவிக்கு, அந்தச் சபைக்குத் தெரிவான உறுப்பினர்களில் கட்சியின் தலைமை யாரைத் தவிசாளராக எழுத்தில் தெரியப்படுத்தியிருந்ததோ அவர் இல்லாத சமயத்தில், ஒரு கூட்டத்தை நடத்தி, அதன் மூலம் வேறு ஒருவரைத் தேர்வு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார் மாவட்ட கிளை தலைவர் குகதாசன்.

இப்போது வடக்கு, கிழக்கு எங்கும் பிரதேச சபை தலைவர்கள், மேயர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டா போட்டி மற்றைய கட்சிகளோடு இழுபறியாகத் தொடர்கின்ற சமயத்தில், அந்த நெருக்கடிக்குள் கட்சித் தலைமை முழுமையாகா சிக்கி இருக்கையில், சமயம் பார்த்து, தம் கைவரிசையை குகதாசன் திட்டமிட்டுக் காட்டுகின்றார் என்று கட்சியின் நிர்வாகிகள் இப்போது சீற்றத்துடன் கொதிக்கின்றனர் எனத் தெரிகின்றது.

தமிழரசின் பெருந் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்து, தம்மை திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராக தேடி கண்டுபிடித்துக் கொண்டு வந்து, உயர்த்திய இரா சம்பந்தனுக்கே கடைசிக் காலத்தில் நம்பிக்கைத் துரோகியாகி தண்ணி காட்டியவர் குகதாசன்.

சி.வி.கே.சிவஞானம் - சுமந்திரன் ஆகியோர் கொண்ட கட்சித் தலைமையோடு ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் சட்டபூர்வ மோதலுக்கு குகதாசன் தயாராகி வருகின்றார் என்று தெரிகின்றது.

தமிழரசுத் தலைமைக்கு எதிராக கிளிநொச்சிக்கு அடுத்து, திருகோணமலையில் மற்றொரு 'சிற்றரசர்' - 'நாட்டாண்மை' உருவாகி வருகின்றார் என்று தோன்றுகின்றது.

* * *

வேலியே பயிரை மேய்கின்ற நிலைமை நாட்டில் ஏற்பட்டிருக்கின்றமை குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பெரும் விசனம் தெரிவித்திருக்கிறார்.

முக்கியமான அரசுத் துறைகளுக்குள் பரவலான ஊழலைக் கண்டித்துள்ளா அவர், சட்டம் - ஒழுங்கை நிலை நிறுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அதிகாரிகள் தாங்களாகவே சட்டங்களை மீறி, குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஜேர்மன் பயணமாக முன்னர், மிஹிந்தலையில் நடந்த பொசன் போயா வழிபாட்டு நிகழ்வில் பேசிய சமயமே அவர் இவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"எல்லோரும் அல்ல, ஆனால் முக்கிய துறைகளில் உள்ள சில அதிகாரிகள் ஊழல் மற்றும் சட்டவிரோத நடைமுறைகளில் பங்கேற்பது கண்டறியப்பட்டுள்ளது" என்று கூறிய ஜனாதிபதி, பல நிறுவனங்களில் உள்ள ஆபத்தான உதாரணங்களைச் சுட்டிக்காட்டினார்.

"சிறைச்சாலைத் துறை கைதிகளை சட்டவிரோதமாக விடுவிக்கின்றது. மேலும் சில பொலிஸ் அதிகாரிகள் குற்றங்களை அடக்குவதற்குப் பதிலாக குற்றவாளிகளின் பாதுகாவலர்களாக மாறிவிட்டடார்கள். குடிவரவுத் துறை அதிகாரிகள் பாதாள உலக நபர்களுக்கு போலி பாஸ்போர்ட்களை வழங்குகின்றார்கள். மோட்டார் போக்குவரத்துத் துறையோ வாகனப் பதிவுகள் தொடர்பான ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

"இதுதான் நாட்டின் நிலை" - என்று ஜனாதிபதி அறிவித்தார்.

இருப்பினும், சமீபத்திய சட்ட அமுலாக்க முயற்சிகள் ஊழல் குற்றச்சாட்டில் குடிவரவு, மோட்டார் போக்குவரத்துத் துறை, சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் துறைகளைச் சேர்ந்த பல அதிகாரிகளைக் கைது செய்ய வழிவகுத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

# வடக்கில் யாசகம் பெறுபவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு



பொது இடங்களில் யாசகம் பெறுபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சிறுவர்களின் நலன்சார் செயற்பாடுகளில் பங்கேற்கும் சகல உத்தியோகத்தர்களுக்குமான ஆலோசனைக் கலந்துரையாடல் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது, அதில் ஓய்வுபெற்ற நீதிபதி ஶ்ரீநிதி நந்தசேகரன் வளவாளராக பங்குபற்றி கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் யாசகம் பெறுபவர்களால் ஏற்படும் பிரச்சினைகளையும், யாசகம் சார்ந்த சட்டங்களையும் மத்திய மாகாண ரீதியில் அல்லாது சகலரும் ஒன்றிணைந்த சட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கோரினார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் பொது இடங்களில் யாசகம் பெறுபவர்களைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களைப் போன்று தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். ஜனாதிபதியின் பொது மன்னிப்பு பெற்றமையைக் குறிக்கும் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்தார் என்று உபுல் தெனிய மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதன்போது, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் சமர்ப்பணங்களை முன்வைத்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2024ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின்போது 57 கைதிகளும், கடந்த பெப்ரவரி 4 சுதந்திர தினத்தன்று 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத போதிலும் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டனர். மேலும், கடந்த வெசாக் பண்டிகையின் போது 29 சிறைகளில் இருந்து 388 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் குறைந்தது இருவர் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைச்சாலைகள், சட்ட அமுலாக்க அமைப்புகளின் பெரும் தோல்வியை இந்தக் கண்டுபிடிப்புகள் பிரதிபலிக்கின்றன. சட்டவிரோத நடைமுறைகள், அதிகார துஷ்பிரயோகம் வேரூன்றத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத வலையமைப்புகளை அகற்றுவதில் சட்டமா அதிபர் திணைக்களம் விசாரணை அதிகாரிகளை ஆதரிக்க வேண்டும்.

நாடு முழுவதும் உள்ள மூத்த சிறை அதிகாரிகள், நிர்வாகிகளின் சொத்துகள், நிதி அறிவிப்புகள் குறித்து தனித்தனியான விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்." – என்றார்.

இதனையடுத்துப் பணி இடை நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனியவை இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதிகளுக்கான ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் போது அனுமதியற்ற முறையில் சிலரை விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே உபுல்தெனிய கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்கு மாறாக நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத கைதி ஒருவர் கடந்த வெசாக் பண்டிகையின்போது விடுதலை செய்யப்பட்டார். இந்த விடயம் பேசுபொருளானதையடுத்து, கடந்த 6ஆம் திகதி ஜனாதிபதியின் மூத்த மேலதிக செயலாளர் எழுத்துபூர்வமாக அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சி.ஐ.டி. விசாரணையைத் தொடங்கியது.

மறுநாள் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அத்துல திலகரட்ண என்ற கைதி சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது. இந்தச் சிறைச்சாலையிலேயே மற்றொரு கைதியும் இவ்வாறு முறையற்ற விதத்தில் விடுதலை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய பணி இடை நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது திஸ்ஸமஹாராமவில் உள்ள தனது வீடு மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன எனத் தவறான தகவலை சமல் ராஜபக்ஷ அளித்துள்ளார் எனவும், அதற்காக அரசிடம் இருந்து ஒரு கோடியே 50 இலட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனவும் அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் கருத்துரைக்கும்போதே சமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாம் ஊழல், மோசடிகளைச் செய்யவில்லை அநீதிகளை இழைக்கவில்லை. நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் எம்மை அர்ப்பணித்துப் பணியாற்றினோம். வெளிநாடுகளின் சதி முயற்சியாலும், அன்றைய எதிரணிகளின் கூட்டுச் சூழ்ச்சியாலும் ஆட்சியில் இருந்து நாம் விலக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்று இந்த அரசு எம்மைச் சிறையில் தள்ள படாதபாடு படுகின்றது. எம்மைச் சிறையில் அடைத்தாலும் நாம் மீண்டு வருவோம்." – என்றார்.

## சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன. குற்றங்களைத் தடுக்க வேண்டிய பொலிஸ் சேவையில் ஒருசிலர் குற்றவாளிகளை பாதுகாக்கின்றனர். சிறைச்சாலை தலைமையகம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராக வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் – மிஹிந்தலை விகாரையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய பொசன் உற்சவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"சமூகம் மற்றும் சமூகம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குற்றங்களைத் தடுக்க வேண்டிய பொலிஸ் சேவையில் ஒருசிலர் குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றனர். இதுவே உண்மை.

சட்டவிரோதமான வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகத்தை தடுப்பது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். ஆனால், அந்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பாதாளக் குழுக்களின் தலைவர்களுக்கு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் பொறுப்பு மீறப்பட்டுள்ளது. சிறைக் கைதிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குவது சிறைச்சாலை தலைமையகத்தின் பிரதான பொறுப்பாகும்.

ஆனால், அந்தத் திணைக்களம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. மக்களுக்குச் சேவையாற்றும் அனைத்து நிறுவனங்களிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

வீழ்ச்சியடைந்துள்ள நிறுவனக் கட்டமைப்பை முதலில் மறுசீரமைக்க வேண்டும். சமூகக் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. சமூகம் மற்றும் சமூகக் கட்டமைப்பிலான நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

வரலாற்று சிறப்புக்களை மாத்திரம் குறிப்பிட்டுக்கொண்டிருந்தால் சமூகம் என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. சமூகக் கட்டமைப்பில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தக் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அவற்றை முறையாக அமுல்படுத்த வேண்டும். பழக்கத்தால் அடிமையான ஒரு விடயத்தை சட்டங்களால் மாத்திரம் மாற்றியமைக்க வேண்டும். செயற்பாடுகள் மற்றும் அடிப்படை விடயங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஆகவே, சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராக வேண்டும்." – என்றார்.





# பௌத்த மதத்தின் நாகரிக பாரம்பரியத்துடன் சிறந்த சமூக மாற்றத்திற்காக ஒன்றிணைவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

பௌத்த மதத்துடன் ஏற்பட்ட மாற்றமானது இலங்கை மக்கள் நாகரீகமான தேசமாக மாற உதவியது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மிஹிந்தலை விகாரையில் நேற்று நடைபெற்ற தேசிய பொசொன் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

'பௌத்த தர்மத்தால் முழு உலகமும் ஒளிரட்டும்' என்ற தொனிப்பொருளின் கீழ், இம்முறை, தேசிய பொசொன் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை தேசத்தை நாகரிக மாற்றத்திற்கு இட்டுச் சென்ற மகிந்த தேரரின் வருகை மற்றும் மிஹிந்தலையை மறந்துவிட்டு, தேசிய பொசொன் நிகழ்வை கொண்டாட முடியாது என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, இவ்வாறான ஆன்மீக விழுமியங்களைக் கொண்ட நிலத்தைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பது ஒரு அரசின் பொறுப்பாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தப் பொறுப்பை பூமியுடன் உணர்வுபூர்வமான தொடர்புடைய பிரஜைகளால் மாத்திரமே நிறைவேற்ற முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அநுராதபுர நகரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மஹிந்த தேரரின் இலங்கை வருகையுடன் நமது நாடு தேரவாத பௌத்த தத்துவம் மற்றும் பாரம்பரியத்தின் மையமாக மாறியது. சமூக மாற்றத்திற்கும் ஆன்மீக விழிப்புணர்வுக்கும் வழிவகுத்த இந்த அற்புதமான நிகழ்வு, வெறும் மத அர்த்தத்தைத் தாண்டி, கலாசாரம், சமூகம் மற்றும் அரசியல் உட்பட நமது நாட்டின் அனைத்து அம்சங்களிலும் மிகவும் மேம்பட்ட கட்டமைப்பை உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த சமூகத்தை மீண்டும் இந்த பூமியில் நிலைநிறுத்துவதன் மூலம் நாட்டிற்கு அவசியமான சமூக மற்றும் சுற்றாடல் நெறிமுறை சார்ந்த புதிய மனப்பான்மையுடன் கூடிய நவீன நாகரீக அரசை கட்டியெழுப்புவதற்கான கைவிட முடியாத பொறுப்பை நிறைவேற்றுவேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

இலங்கையின் முதல் நகரம், முதல் குளம், முதல் அறுவை சிகிச்சைத் தளம் மற்றும் யோத கால்வாய் போன்ற பாரம்பரியங்களைக் கொண்ட அநுராதபுரத்தை அதன் பண்டைய பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வகையில் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்திய உதவியின் கீழ் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இந்தியப் பிரதமர் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

மிஹிந்தலை விகாரவாசி வண, சுருக்குளமே இந்திரரதன தேரரால் வரவேற்பும், நோக்கம் தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மிஹிந்தலை ரஜமஹா விகாராதிபதி கலாநிதி வலவா ஹெங்குணவெவே தம்மரதன தேரர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, அமைச்சர் வசந்த சமரசிங்க, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க, பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சேன நாணாயக்கார, திலின தாருக சமரகோன், பாக்ய ஸ்ரீ ஹேரத், அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய மற்றும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித் துறையில் குளறுபடி!

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நாள்கள், நிகழ்வுகளை ஒட்டி ஜனாதிபதியினால் வழங்கப்படும் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் கைதிகள் விடுவிக்கப்படும் நடவடிக்கையில் பெரும் ஊழல், முறைகேடுகள், மோசடிகள் இடம் பெற்றிருக்கின்றமை அம்பலமாகி வருகின்றது.

ஜனாதிபதியின் மன்னிப்பு திட்டம் என்ற போர்வையில் கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டமை தொடர்பில் மேலதிக பல சம்பவங்கள் குறித்து விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன எனத் தெரிகிறது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இந்தத் தகவல்களை நீதிமன்றத்தில் தெரிவித்து இருக்கிறார்.

ஜனாதிபதி மன்னிப்பு என்ற போர்வையில் கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டதற்கான கூடுதல் சம்பவங்கள் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளன என அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அவரின் கூற்றுப்படி, 2024 கிறிஸ்மஸின் போது 57 கைதிகளும், 2025 சுதந்திர தினத்தின் போது மேலும் 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் தவறாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வெசாக் போயாவின் போது, நாடு முழுவதும் 29 சிறைகளில் இருந்து 338 கைதிகள் விடுவிக்கப்பட்டனர் எனவும், அவர்களில் குறைந்தது இரண்டு பேர் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் தற்போது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தை ஒட்டிப் பணிநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையர் ஜெனரல் துஷார நிஷாந்த உபுல்தெனிய கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க முன் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இந்த சமர்ப்பணங்களை வழங்கியிருக்கின்றார்.

சில கைதிகள் ஜனாதிபதியின் மன்னிப்புப் பெற்றமையைக் குறிக்கும் போலி ஆவணங்களை சமர்ப்பித்தார் என உபுல்தெனிய மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிறைச்சாலை மற்றும் சட்ட அமலாக்க அமைப்புகளுக்குள் மிக மோசமான குளறுபடிகளும், சட்ட விரோத நடவடிக்கைகளும், அதிகாரத் துஷ்பிரயோகமும் ஆழமாக வேரூன்றி இருக்கின்றமையையே இந்த விடயங்கள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

இந்த விவகாரம் அம்பலமானமையை அடுத்து, இந்த அமைப்பிற்குள் வேரூன்றியுள்ள சாத்தியமான ஊழல்களை வெளிக்கொணர்வதற்கான தேவை எழுந்துள்ளது. ஆகையினால், நாடு முழுவதும் உள்ள அனைத்து மூத்த சிறை அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகளின் சொத்துக்கள் மற்றும் நிதி அறிவிப்புகள் குறித்து தனித்தனி, விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

அநுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அதுல திலகரத்ன என்ற கைதி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு என்ற திட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தமையை அடுத்தே இந்த விவகாரங்கள் அம்பலமாகியிருக்கின்றன.

எது, எப்படியாயினும் நீதித்துறையின் மிக முக்கியமான கட்டமைப்புக்குள் இடம் பெற்ற மிக மோசமான ஊழல் இது. நீதித்துறையில் பல கட்டமைவுகளில் இத்தகைய மோசடி முறைமைகள் தாராளமாக இருக்கின்றன என்ற பேச்சு - கருத்து - மக்கள் மத்தியில் உள்ளது. நீதி விசாரணை, வழங்கல் முறையில் கூட இத்தகைய குளறுபடிகள் இருக்கின்றன என்ற சந்தேகங்கள் - பேச்சுக்கள் - உண்டு. ஆனால் அவற்றை முறையாகக் கண்டறிவதற்கான முறைமை ஒன்று நாட்டில் இல்லை. அது பற்றி சிந்திக்க வேண்டிய ஒரு காலம் ஏற்பட்டு இருப்பதாகத் தோன்றுகின்றது.

# பொறுப்புக்கூறலுக்கான கடமைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி அனுரவை ஜேர்மன் வலியுறுத்த வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தமது உறுதி மொழிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை ஜேர்மன் வலியுறுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று உத்தியோகபூர்வ விஜயமாக ஜேர்மன் செல்லவுள்ள நிலையில், ஜேர்மனிக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிலிப் ஃபிரிஷ் அறிக்கையொன்றின் ஊடாக இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"30 வருட யுத்தத்தின்போது, கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட பரவலான துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் அரச படைகள் பொதுமக்களைத் தாக்கியதுடன், சிலரை வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கியுள்ளன.

போருக்கு பின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலின் அவசியத்தை எடுத்துக்காட்டும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதுடன், சாட்சிய சேகரிப்பு செயல்முறையையும் நிறுவியுள்ளது.

எனினும், அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கமும் இதுவரையான செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் அதன் முந்தைய அரசாங்கங்களிடமிருந்து வேறுபட்டதாகத் தெரியவில்லை.

இதன்படி, போர்க்குற்றங்களில் தொடர்புடைய முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகளைப் பாதுகாத்து, பேரவையின் கோரிக்கைகளை நிராகரித்துள்ளது.

இந்த அரசாங்கம் நடந்து வரும் மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காணவில்லை, கடந்த கால அட்டூழியங்களுக்கு நீதி வழங்குவதில் பின்நிற்கிறது. அதேநேரம், அனுரகுமார திசாநாயக்க 2017 ஆம் ஆண்டு முதல், தடைச் சட்டத்தை ரத்து செய்வதாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுதியளித்தார்.

எனினும், தற்போது அவரது அரசாங்கம் அதே சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது.

இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் ஜேர்மனி முன்னர் முன்னணி நாடாக இருந்தது, எனினும் 2022 ஆம் ஆண்டில் அந்தப் பங்கிலிருந்து விலகியது.

பொறுப்புக்கூறலுக்கான அழுத்தத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், ஆதாரங்களைச் சேகரிப்பதை உறுதி செய்யவும், இந்த ஆண்டின் பிற்பகுதியில் தீர்மானம் புதுப்பிக்கப்படுவது மிக அவசியமாகும்.

எனவே, ஐக்கிய நாடுகள் முயற்சிகள் மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் உறவுகளின் அடிப்படையில் பெர்லினுக்கு வருகை தரும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் சீர்திருத்தங்களுக்கான அவரது உறுதிமொழிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற ஜேர்மனிய ஜனாதிபதி, வலியுறுத்த வேண்டும்.

எனவே, அதற்காக தற்போது கிடைக்கும் இந்த வாய்ப்பினை ஜேர்மன் ஜனாதிபதி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்." என ஜேர்மனிக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிலிப் ஃபிரிஷ் தெரிவித்துள்ளார்.

# சிறைச்சாலை வைத்தியர்கள் முறைகேடு விசாரணை வேண்டுமென கோரிக்கை

சிறைச்சாலை வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் தங்கள் சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்தி, முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது முறையான விசாரணை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைத்திய மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அரசியல் தலைவர்கள் மற்றும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு, சிறைச்சாலை வைத்தியசாலைகளில் விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த விசேட வசதிகளை வழங்குவதற்காக, தவறான வைத்திய அறிக்கைகளும் சிறைச்சாலை வைத்தியசாலைகளில் வழங்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வைத்திய மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ கோரியுள்ளார்.

# சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசாங்கம் பலிகடாவாகியுள்ளது; ஹர்ஷ டி சில்வா

சர்வதேச நாணய நிதியத்துக்கு இலங்கை அரசாங்கம் பலிகடாவாகியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையிலேயே, மின்சாரக் கட்டணத்தை 18.3 சதவீதத்தால் அதிகரிக்கும் விடயத்தில் அரசாங்கம் செயற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய நிலையில் மின்சாரக் கட்டணத்தை 18.3 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அவசியமில்லை எனவும் எனினும், அரசாங்கம் சட்ட ரீதியற்ற மற்றும் செயற்படுத்த முடியாத நிபந்தனைக்கு உடன்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையிலேயே, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை பெற்றுக்கொள்வதற்காக மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்துவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.





# வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு பெண் பக்தர்கள் பறவைக் காவடிகள்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசிப் பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் மிகச் சிறப்பாக பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

வெகு விமர்சையாக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச் சிறப்பான முறையில் நடைபெற்ற இந்த உற்சவத்தில் பெண் அடியார்கள் தூக்குக் காவடி எடுத்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியமையையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.











# வெற்றுச் சவடால்களுக்கு ரெலோ அஞ்ச மாட்டாதாம்

## அதன் பேச்சாளர் சுரேன் குருசாமி அறிக்கை



ஆணவத்தை விடுத்து அரவணைப்பே தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை நெறிப்படுத்தும். தமிழ்த் தேசியப் பரப்பின் ஒற்றுமைக்கான இறுதிச் சந்தர்ப்பத்தையும் கோட்டை விடுகிறது தமிழரசுக் கட்சி.

– இப்படி ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமி தாம் வெளியிட்ட அறிக்கை அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியத் தரப்பாக ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கு பல தடவைகள் தமிழரசு கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எடுத்துக் கொண்ட முயற்சிகள் உதாசீனப் படுத்தப்பட்டன. இதன் பின் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கும் தமிழ் தேசிய பேரவைக்கும் இடையிலான கொள்கை ரீதியான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது சாதாரணமாக ஏற்படுத்தப்படவில்லை. பல விட்டுக்கொடுப்புகள் அரவணைப்புகளின் அடிப்படையில்தான் சாத்தியமானது.

இதன் பின் தோன்றிய அரசியல் சூழ்நிலை மாற்றங்களில் வன்னி நிலப்பரப்பில் தமிழ் தேசிய கட்சிகளின் கைகளில் சபைகளை வலுப்படுத்துகின்ற நிலைப்பாடு பற்றி பேசவே நாங்கள் அழைக்கப்பட்டோம்.

அதன் பிரகாரம் திங்கள் மதியம் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஐயா அவர்கள் அலுவலகத்தில் அக்கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

அதன்போது வன்னியின் அரசியல் சூழ்நிலை பற்றி கலந்துரையாட முற்பட்ட வேளையில் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறதோ அதற்கான பதில் நடவடிக்கை வன்னியில் அமையுமென தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

உங்கள் கருத்துக்கள் பயனற்றவை. வன்னியில் அதிக சபைகளை ஆளும் தரப்பு கைப்பற்றும் நிலை காணப்படுகிறது. பல சபைகளில் தனி ஒரு கட்சியாக அவர்கள் ஆசனங்களை பெற்றுள்ளார்கள். தமிழ் தேசியப் பரப்பினர் இணைந்து செயலாற்றாது விட்டால் இந்த சபைகளை ஆளும் தரப்பிடம் இழக்க வேண்டிய சூழ்நிலை வரும். மேலும், கிழக்கு மாகாணத்தில் மாறுபட்ட அரசியல் சூழ்நிலைகளை தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்தோம்.

இன்னும் காலம் பிந்தவில்லை. தமிழ் தேசிய பரப்பினர் ஒன்றிணைந்து விட்டுக் கொடுப்போடு வடக்கு, கிழக்கில் அனைத்து சபைகளையும் அமைப்பதற்கான முயற்சியை செய்ய முடியும். அதை நாங்கள் முன்னெடுக்க விரும்புகிறோம் எனவும் தெரிவித்தோம்.

ஆனாலும் இணக்கமான சூழ்நிலைக்கு பதிலாக வறட்டு சவடால்களே பதிலாகின.

தனிமனித வீர வசனங்களால் எமது இனத்தினை நேர்த்தியான பாதையில் வழி நடத்த முடியாது. மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று தமிழ்த் தேசியப் பரப்பினர் ஒன்று கூடி ஆட்சியை கைப்பற்றுவதே மக்கள் எதிர்பார்ப்பு. அதை செய்வதற்கு விட்டுக்கொடுப்பு, அரவணைப்பு என்பன மிக அவசியம். தலைமைகளை வறட்டு கௌரவம் இதற்கு தடையாக இருக்கக் கூடாது.

எப்பொழுதும் ஒற்றுமைக்காகவே ரெலோ பாடுபட்டு வந்துள்ளது. அதில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டவர்கள் நாங்கள். அதை தவறாக புரிந்து கொண்டு வீர வசனங்கள் பேசுவதில் அர்த்தம் இல்லை. வெட்டிச் சவடால்களுக்கு நாங்கள் ஒருபொழுதும் இடமளியோம். – என்று அதில் உள்ளது.

# வெறும் வாய்ச் சவடால்கள் நாங்கள் வெளியிடவில்லை

## ரெலோவுக்கு சுமந்திரன் பதிலடி

நாம் வெறும் வாய்ச் சவடால்கள் விடவில்லை என ரெலோவுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் சுருக்கமான செய்திக் குறிப்பு ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

“நாம் வெறும் வாய்ச் சவடால்கள் விடவில்லை. ஆரம்பத்தில் இருந்தே நீங்களும் ஏற்றுக் கொண்ட கோட்பாட்டின்படி ஒழுக வேண்டும் என்றே கேட்கிறோம். அதை விடுத்து, எம்மை வீழ்த்துவதற்காக பொய்யாக கொள்கைக் கூட்டு என்று சொல்லி உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்ததாகக் காட்டுவது ஏற்றுக் கொள்ள முடியாது. இணங்கியபடி நடந்து கொண்டால் விட்டுக் கொடுப்புக்களுக்கு இப்போதும் இடமுண்டு. – என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# அக்கரைப்பற்றில் ஆரம்பமான அக்கரைப்பற்று புத்தகக்காட்சி

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்றில் நடைபெறும் ஐந் தாவது "அக்கரைப்பற்று புத்தகக் காட்சி-2025" நேற்று செவ்வாய்க் கிழமை அக்கரைப்பற்று நீர்த்தடாக பூங் காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்புத்தக்காட்சியின் பிரதான ஏற்பாட் டாளர் சிராஜ் மஷ்ஹூர் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தமையோடு, புத்தகக்காட்சியில் உள்ள புத்தக நிலையங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களின் கூடா ரங்களுக்கும்சென்று அவற்றைப்பார்வை யிட்டார்.

நிகழ்வில் சமுத்ர புத்தகசாலையின் பணிப்பாளர் திருமதி சமுத்ரிகா டி சில்வா விசேட அதிதியாகவும், கல்வியலாளர் கள், வைத்தியர்கள், எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நேற்றுவ்செவ்வாய்க்கிழமை தொடக் கம் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இப்புத்தகக்காட்சி தினமும் காலை 10.00 மணி முதல், இரவு 10.00 மணிவரை நடைபெறவுள்ளதோடு, இன்னும் பல கலை நிகழ்வுகளும் இதன் இணைந்த அம்சங்களாக இடம்பெறவுள்ளன என புத்தகக்காட்சியின் பிரதான ஏற்பாட் டாளர் தெரிவித்தார்.


# சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவில் கட்டாக்காலிகளினால் விபத்துகள்













(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் காலை முதல் மாலை வரை பிரதான வீதிகள் உள்ளக வீதிக ளில் கட்டாக்காலி மாடுகளினால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அண்மையில் கூட சம்மாந்துறை விளினியடி சந்தியில் மாடுகளால் ஏற் பட்ட விபத்தில் ஓட்டோ ஒன்று சேத மடைந்ததுடன் சாரதி காயமடைந்தி ருந்தார்.

இது தவிர நேற்று மோட்டார் சைக்கிள் கள் இரண்டுடன் கட்டாக்காலி மாடுகள் மோதியதில் இருவர் காயமடைந்துள்ள னர்.

இந்த மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி வந்த இருவரே கை மற்றும் கால்களில் காயமடைந்த நிலையில் அரு கில்உள்ளவைத்தியசாலைக்குஅழைத்து செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் சம்மாந் துறை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர்.





# மட்டு. மாவட்டத்தில் நிர்வாகங்களை அமைக்க ஒப்பந்தங்கள் எவற்றையும் செய்யவில்லை!

## சத்தியப்பிரமாண நிகழ்வில் சாணக்கியன் எம்.பி. விளக்கம்

(வாலகிருஸ்ணா)

நாங்கள் எந்தக் கட்சியுடனும் ஒப்பந்தம் செய்து சபைகளில் ஆட்சியதிகாரத்தை எடுப்பதற்கு செல்லவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருக்கின்ற உறுப்பினர்கள் எங்களுக்கு ஆதரவு தருகின்றார்கள். நாங்கள் எங்களுடைய உறுப்பினர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவாக வழங்குவோம். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்திலே ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றோம் எனச்சொல்வது முற்று முழுவதுமாக பொய்யான விடயமாகும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு அமெரிக்க மிசன் மண்டபத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட தமிழரசுக்கிளையின் தலைவருமான இரா.சாணக்கியன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபை உட்பட 11 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நடைபெற்றதுடன் கட்சியின் உறுதியுரையும் எடுக்கும் நிகழ்வும் இடம் பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பை பொறுத்தமட்டிலும் சரி, வடக்கு - கிழக்கை பொறுத்தமட்டிலும் சரி, இலங்கை தமிழரசுக் கட்சிக்கு பாரிய வெற்றி கிடைத்திருக்கின்றது. கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இம்முறை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலே 86 உறுப்பினர்கள் நேரடியாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். அது உண்மையில் எங்களுடைய கட்சிக்கு பெரும் வெற்றியாகும்.

2018ஆம் ஆண்டு நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டதை விட அதிகளவான ஆசனங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியாக தனித்து நின்று எங்களுடைய உறுப்பினர்களைத் தெரிவு செய்திருக்கின்றோம்.

நாங்கள் போட்டியிட்ட பதினொரு சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏதோவொரு வகையாக ஆட்சியதிகாரத்தை எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்ற நல்லதொரு செய்தியை இந்த இடத்தில் கூறிக்கொள்கின்றோம். இதிலே தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய ஒன்பது பிரதேச சபைகளிலே நாங்கள் தவிசாளர் ஒருவரை, மேயர் ஒருவரை, உதவி தவிசாளர் ஒருவரை, பிரதி மேயர் ஒருவரை எங்கள் கட்சியின் சார்பில் முன்மொழிய இருக்கின்றோம்.

நாங்கள் போட்டியிட்ட அனைத்து சபைகளிலும் தவிசாளர் பதவி எங்கள் கட்சிக்குத்தான் கிடைக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். நாங்கள் சிறுபான்மையாக இருக்கும் ஓட்டமாவடி மற்றும் ஏறாவூர் ஆகிய இரண்டு சபைகளிலும் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எங்களுடைய உறுப்பினர்கள்தான் தவிசாளரை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்றார்கள்.

தேர்தலுக்கு முன்பாக நாங்கள் சொன்னதற்கு இணங்க மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். எங்களுடைய உறுப்பினர்கள் வெற்றியடைந்திருக்கின்றார்கள். நாங்கள் சில சபைகளிலே முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்கவேண்டிய தேவை இருக்கின்றது. குச்சவெளி, மூதூர் போன்ற சபைகளிலே 40வீதமான தமிழர்களும் 60வீதமான முஸ்லிம்களும் இருக்கின்ற மூதூர் சபையிலே தமிழர் ஒருவரை தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமித்திருக்கின்றது.

யாழ் மாநகர சபையிலே நாங்கள் எங்களுக்கு கிடைத்த பட்டியல் ஆசனத்தை முஸ்லிம் உறுப்பினருக்கு வழங்கியமைக்காக எங்களுடைய கட்சியை சேர்ந்தவர்களல்லர், கட்சிக்கு வெளியில் இருப்பவர்கள் விமர்சித்திருக்கின்றனர். அதே நேரம் 60 வீதமான முஸ்லிம்கள் வாழும் மூதூர் சபையிலே தமிழர் ஒருவரை தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமித்திருக்கின்றது.

தொடர்ச்சி▼







# மட்டு. மாவட்டத்தில் நிர்வாகங்களை அமைக்க ஒப்பந்தங்கள் எவற்றையும் செய்யவில்லை!

## சத்தியப்பிரமாண நிகழ்வில் சாணக்கியன் எம்.பி. விளக்கம்

தொடர்ச்சி▲

எங்களுடைய அரசியல் குழுக் கூட்டத்திலே நாங்கள் எடுத்த தீர்மானம் தமிழ்ப் பேசும் கட்சிகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு நாங்கள் எங்களுடைய தவிசாளர் பதவிகளை எடுப்பதற்கான வேலைகளை பார்க்க வேண்டும். அதைத்தான் நாங்கள் செய்திருக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியைத் தவிர ஆசனங்களைப் பெற்ற ஏனைய கட்சிகளாக தேசிய மக்கள் சக்தி, கிழக்குத் தமிழர் கூட்டணி அல்லது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, சங்கு சின்னத்தில் போட்டியிட்ட கட்சி, சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு 2ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் உள்ளன. இதிலே இலங்கை தமிழரசுக் கட்சி அனைத்து சபைகளிலும் தவிசாளராகவும், மேயராகவும் பிரதி தவிசாளராகவும், பிரதி மேயராகவும் நாங்கள் வேட்பாளர்களை முன்னிறுத்தும்பொழுது இதிலே தெரிவு செய்யப்பட்ட தமிழ் உறுப்பினர்கள் எவராக இருந்தாலும் எங்களுடைய கட்சிக்கு விரும்பினால் ஆதரவளிக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே நாங்கள் எந்தக் கட்சியுடனும் ஒப்பந்தம் செய்து சபைகளில் ஆட்சியதிகாரத்தை எடுப்பதற்கு செல்லவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருக்கின்ற உறுப்பினர்கள் எங்களுக்கு ஆதரவு தருகின்றார்கள். நாங்கள் எங்களுடைய உறுப்பினர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவாக வழங்குவோம். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்திலே ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றோம் எனச்சொல்வது முற்றுமுழுவதுமாக பொய்யான விடயமாகும்.

நேற்றுக்கூட மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கின்ற ஈ.பி.டி.பி.. உறுப்பினர்களை சாணக்கியனுடைய அலுவலகத்திற்கு அழைத்திருக்கின்றார்கள் என்று பொய்யான செய்திகளை பரப்பியிருந்தனர். இப்படியான பொய்யான செய்திகளை பரப்பி எங்களுடைய மாவட்டத்தில் எங்களுடைய கட்சிக்குள்ளே பல குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இது முற்றாக பொய்யான செய்தியாகும்.

பல கட்சிகள் எங்களுடன் பேசியிருந்தனர். நீங்கள் இந்த சபைகளை விட்டுத்தந்தால் நாங்கள் மற்றைய சபைகளிலே உங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவை தருவோம் என்று அதிலே சில கட்சிகள் கூறியிருந்தனர். எங்களுடைய கட்சியை சேர்ந்த ஒருவர் தவிசாளராக, மேயராக வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றபோது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் அந்த சந்தர்ப்பத்தை இன்னுமொரு கட்சிக்கு வழங்குவதை விரும்பமாட்டார்கள். ஏனைய கட்சிகளுடைய செயற்பாடு எவ்வாறாக அமையுமென்று நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.

தேசிய மக்கள் சக்தி ஒரு பேரினவாதக் கட்சியாகும். தமிழ் மக்களுக்கு விரோதமான கட்சியாகும். இந்த மாவட்டத்திலே ஆட்சியமைப்பதற்கு விரும்புமாக இருந்தால் அவர்கள் சேர்ந்து ஆட்சியமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கட்டும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைப்பது என்றால் அது அவர்களுடைய முடிவாகும். அதை மக்கள் விளங்கிக் கொள்வார்கள். அதேபோல சங்கு சின்னத்தில் போட்டியிட்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது உறுப்பினர்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கோ தேசிய மக்கள் சக்திக்கோ ஆதரவாக வழங்கப் போகின்றார்கள் என்றால் மக்கள் அதற்கான தீர்ப்பை வழங்கட்டும்.

அவர்கள் தமிழ் மக்களுடைய பிரதானமான கட்சியும், கூடிய ஆசனங்களை பெற்ற கட்சியுமான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தங்களுடைய ஆதரவை வழங்காது விடுவார்களானால் அவர்களுடைய எதிர்கால அரசியலைப்பற்றி மக்கள் முடிவெடுக்கட்டும். நாங்கள் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருக்கின்றோம். நாங்கள் பிரதானமான கட்சி என்ற வகையிலே எங்களுடைய உறுப்பி

தொடர்ச்சி▼











# மட்டு. மாவட்டத்தில் நிர்வாகங்களை அமைக்க ஒப்பந்தங்கள் எவற்றையும் செய்யவில்லை!

## சத்தியப்பிரமாண நிகழ்வில் சாணக்கியன் எம்.பி. விளக்கம்

தொடர்ச்சி▲

னர் ஒருவரை அந்த உள்ளூராட்சிமன்றத் தலைவராக முன்மொழிகின்றோம். நீங்கள் உங்களுடைய நிபந்தனையற்ற ஆதரவைத் தரலாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை தோற்கடிப்பது மாத்திரம் தான் உங்களுடைய நோக்கம் என்றால் – எங்களுடைய கட்சியைத் தோற்கடிப்பதற்கு மனச்சாட்சிக்கு ஒவ்வாத விடயங்களை நீங்கள் செய்வீர்களானால் – அதற்கான பதிலை எதிர்வரும் காலங்களில் எங்களுடைய மக்கள் வழங்குவார்கள். பல கட்சிகள் இன்று கைகளில் இருக்கும் விரல்களின் எண்ணிக்கையை விடவும் குறைவான உறுப்பினர்களை பெற்றிருக்கின்றார்கள். அதுவும் இல்லாத நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களை அனைத்து சபைகளிலும் தவிசாளராக நியமிப்பதற்கு அனைத்து கட்சிகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் முன்வரவேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் தமிழ் மக்களுக்க எதிரான ஒரு சக்தி பிரதேசங்களில் ஆட்சியமைப்பதற்கு உதவியாக இருக்கின்றீர்கள் என்ற செய்திதான் வெளிவரும். நாளைய தினமிருந்து சபைகளிலே வாக்கெடுப்பு ஆரம்பமாக இருக்கின்றது. போரதீவுப்பற்று, வவணதீவு சபைகளில் நாங்கள் அறுதிப்பெரும்பான்மையுடன் வென்ற காரணத்தினால் எங்களால் அங்கு ஆட்சியமைக்கக்கூடியதாக இருந்தது. நேற்றைய தினம் இரண்டு சபைகளிலும் தவிசாளர்கள் கூட்டத்தை நடத்தியிருக்கின்றார்கள். நாளைய தினம் முதலாவதாக மாநகரசபையிலே வாக்கெடுப்பு நடைபெறவிருக்கின்றது.

நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். பல பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றோம். அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்கக்கூடியதாக இருக்கும். மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல சபைகளிலும் வாக்கெடுப்பை நடத்தி முடிப்போம். எங்களுடைய உறுப்பினர்கள் அனைத்து சபைகளிலும் தலைவர்களாக தெரிவுசெய்யப்படுவார்கள்.

இது ஒரு பாரிய வெற்றியாகும். இந்த வெற்றியிலிருந்து எங்களுடைய அடுத்த இலக்கு மாகாணசபைத் தேர்தலை இலக்கு வைத்து அனைவரும் களத்தில் இறங்கி வேலை செய்ய வேண்டும். உள்ளூராட்சிமன்ற அதிகாரங்களை வைத்து எங்களுடைய மக்களுக்கு பிரதேச ரீதியாக சேவைகளை வழங்கலாம். ஆனால் மாகாண ரீதியாக பல நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன. சுகாதாரத் துறை, கல்வித்துறை, நீர்ப்பாசனத் துறை, வீதி அபிவிருத்தி எனப் பல துறைகளிலும் மத்திக்கும் மாகாணத்திற்குமிடையில் இருக்கும் குழப்பங்கள் காரணமாக பல நிர்வாகச் சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன. இதனால் எங்களுடைய மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமலிருக்கின்றனர். இதற்கான தீர்வை காண்பதாக இருந்தால் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும்.

தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு ஒரு பாரிய பொறுப்பிருக்கின்றது. நாங்கள் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகளவான ஆசனங்களை பெற வேண்டும் என்ற நோக்குடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சேர்ந்து வேலைகளை செய்திருக்கின்றோம். மாகாணசபைத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் மூவரும் நீங்கள் 86 பேரும் இணைந்து செயற்பட்டால் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முதலமைச்சர் பதவியை எடுக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்கிக்கொள்ளலாம். இதற்காக நாங்கள் ஓரணியில் நின்று உழைக்க வேண்டும். ஒரு சவாலாக இதனை எடுத்து எங்கடைய அரசியற் பயணத்தை முன்னெடுக்க வேண்டும்.

நாங்கள் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொரு நாளும் பல தரப்புகளுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றோம். வெளியிலிருந்து பலவாறாக விமர்சித்துக் கொள்ளலாம். சில சபைகளிலே ஆட்சியமைப்பதற்காக நாங்கள் விரும்பாத சில வேலைகளையும் சில இடங்களுக்கும் சென்று சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தது.

எங்களுடைய சத்தியப் பிரமாண நிகழ்வு எல்லா மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை அழைத்து செய்திருக்கின்றனர். அந்தந்த பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவதற்கு உதவியாக இருந்த உதவி வேட்பாளர்களையும் கிளை உறுப்பினர்களையும் நாங்கள் அழைத்திருக்கின்றோம். கட்சியினுடைய சத்தியப் பிரமாண நிகழ்வென்றால் நாங்கள் அழைப்பிதழ் வழங்கத் தேவையில்லை. அதனை அறிந்தால் அனைவரும் வரவேண்டும். கிடைத்த வெற்றியினுடைய பங்காளிகளாக இருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் நாங்கள் அனைவரும் இணைந்து ஓரணியாக நின்று இலங்கை தமிழரசுக் கட்சியை, எங்களுடைய மக்களுடைய பிரதான கட்சியை மென்மேலும் பலப்படுத்துவோம். – என்றார்.



# நாங்கள் பாகிஸ்தானுக்குள் மிக ஆழமாகச் செல்வோம்

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் எச்சரிக்கை

பாகிஸ்தானின் பயங்கரவாத ஆத் திரமுட்டல்களுக்கு எதிராக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கடுமையான எச்சரிக் கையை விடுத்துள்ளார். பயங்கரவாதத் துக்கு எதிராக இந்தியா எந்த வகை யிலும் பதிலடி கொடுக்கத் தயங்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான உயர்மட்ட வர்த்தகப் பேச்சுவார்த்தை ளுக்காக பெல்ஜியம் தலைநகரம் பிரஸ்ஸல்ஸுக்கு சென்றுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர். செய்தி நிறுவனங்களுக்கு பேட்டி அளித்தபோது,

“பயங்கரவாதிகள் பாகிஸ்தானுக் குள் ஆழமாக இருந்தால், நாங்கள் பாகிஸ்தானுக்குள் இன்னும் ஆழ மாகச் செல்வோம். பாகிஸ்தான் பயங் கரவாதத்தை அரச கொள்கையின் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில் மிகவும் மூழ்கியிருக்கும் ஒரு நாடு. அதுதான் இங்கே முழுப் பிரச்சினை. பயங்கரவாதத்துக்கான உறுதிப் பாட்டை பதற்றத்தின் ஆதாரம் என்று



நீங்கள் அழைத்தால், அது நிச்சயமாக பதற்றம்தான்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குத லுக்கு பதிலடியாக ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்திய விமானப் படைத் தாக்குதல்கள், பாகிஸ்தானின் இராணுவ உள்கட்ட மைப்பை கடுமையாக சீரழித்துவிட் டன. வெளிப்படையாக சொன்னால் என்னைப் பொறுத்தவரை, ரஃபேல் இதற்கு பெரிதும் பயனுள்ளதாக இருந் தது. மற்ற அமைப்புகளும் பயனுள் ளதாக இருந்தன. இதற்கு சான்று பாகிஸ்தான் தரப்பில் அழிக்கப்பட்ட மற்றும் முடக்கப்பட்ட விமான நிலை யங்கள்தான்.

மே 10 ஆம் திகதி ஒரே ஒரு கார ணத்துக்காகவே மோதல் நிறுத்தப்பட் டது. அதாவது, 10 ஆம் திகதி காலை யில் முக்கியமான 8 பாகிஸ்தான் விமான நிலையங்களையும் தாக்கி அவற்றை முடக்கினோம். நான் சொன்னதை கூட நம்ப வேண்டாம். கூகுளில் கிடைக்கும் பாதிக்கப்பட்ட ஓடுபாதைகள் மற்றும் ஹேங்கர்களின் படங்களை நீங்களே பார்க்கலாம்.

பாகிஸ்தான் தொடர்ந்து ஆயிரக் கணக்கான பயங்கரவாதிகளுக்கு திறந்தவெளியில் பயிற்சி அளித்து, அவர்களை இந்தியாவின் மீது கட்டவிழ்த்துவிடுகிறது. நாங்கள் இதனை சகித்துக்கொள்ள போவ தில்லை. எனவே அவர்களுக்கு எங் கள் செய்தி என்னவென்றால், பஹல் காம் தாக்குதல் போல காட்டுமிராண் டித்தனமான செயல்களை நீங்கள் தொடர்ந்து செய்தால், பழிவாங்கப்படு வீர்கள். அந்தப் பழிவாங்கல் பயங்கர வாத அமைப்புகள் மற்றும் பயங்கர வாதத் தலைமைக்கு எதிராக இருக் கும்.” என்றார்.

# ஜம்மு காஷ்மீர், மணிப்பூரில் அமைதி உள்ளதென்ற அமித் ஷாவின் கருத்து அபத்தம்; ஜெய்ராம் ரமேஷ்

ஜம்மு-காஷ்மீர் மற்றும் வட கிழக்கில் அமைதி நிலைநாட்டப்பட் டுள்ளது என்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறிய கருத்து அபத்தமானது என காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஜெய்ராம் ரமேஷ் விமர் சித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“ஜம்மு-காஷ்மீர் மற்றும் மணிப் பூரில் அமைதி நிலவுவதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று கூறிய கருத்து அபத்தமானவை மற்றும் ஆதாரமற்றவை. தனது சொந்த மிகப்பெரிய தோல்விகளிலி ருந்து கவனத்தைத் திசைதிருப்பவே இந்த கருத்தினை கூறியுள்ளார்

ஏப்ரல் 22, 2025 அன்று பஹல்காமில் நடந்த காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பொறுப்பான பயங்கரவாதிகள் இன்னும் நீதியின் முன் நிறுத்தப்பட



வில்லை. இன்னும் மறுக்கப்படாத சில அறிக்கைகளின்படி, அதே பயங்க ரவாதிகள் டிசம்பர் 2023 இல் பூஞ்ச் மற்றும் ஒக்டோபர் 2024 இல் ககாங்கிர் மற்றும் குல்மார்க்கில் நடந்த பயங்கர வாத தாக்குதல்களிலும் ஈடுபட்டுள் ளனர்.

மணிப்பூர் இன்னும் எரிந்து கொண் டிருக்கிறது. ஜனாதிபதியின் ஆட்சி மணிப்பூரில் முழுமையான தோல்வி யாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மாநிலத் தில் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தின் துயரம் அவர்களிடையே வேதனை, விரக்தி மற்றும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது, இது எல்லா இடங்களிலும் உணரப் படுகிறது.

மத்திய உள்துறை அமைச்சரால் பஹல்காம் பயங்கரவாதிகளைத் தண்டிக்கவோ அல்லது மணிப்பூரில் இயல்பு நிலையை மீட்டெடுக்கவோ முடியவில்லை. ஆனாலும், இந்த இரண்டு மாநிலங்களிலும் தான் செய்ததாகக் கூறப்படும் சாதனைக ளைப் பற்றி அவர் தொடர்ந்து பறை சாற்றிக் கொண்டிருக்கிறார்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், அதிகபட்ச பெருமையடித்துக் கொண் டும் குறைந்தபட்ச சாதனைகள் புரிந் தும் ஒரு மத்திய உள்துறை அமைச்சர் அரிதாகவே இருந்திருக்கிறார். இருப்பி னும், அவர் தனது மகனுக்காகச் செய் தது ஒரு சாதனையாகக் கருதப்பட் டால், அது வேறு விஷயம்.”- என்றார்.

# அடுக்குமாடியில் தீ விபத்து; கீழே குதித்த மூவர் பலி

டில்லி, துவாரகா பகுதியில் அமைந் துள்ள அடுக்குமாடி குடியிருப்பொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்தின் ஏழாவது தளத் தில் இந்த பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள் ளதாக இந்திய செய்திகள் தெரிவிக் கின்றன.

இந்த விபத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் கட்டடத்தில் இருந்து கீழே குதித்த மூவர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் இரு சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர் என தெரிவிக்கப் படுகிறது.








# ஒஸ்ட்ரியாவில் பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச் சூடு; 10 பேர் உயிரிழப்பு

ஒஸ்ட்ரியாவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் என சந்தேகிக்கப்படும் நபரும் தமது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயம் அடைந்த பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரி குறித்த தகவல்கள் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் போராட்டம்: செய்தியாளர் மீது துப்பாக்கி சூடு

அமெரிக்காவின் – லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்று வரும் போராட்டத்தில் பெண் செய்தியாளர் ஒருவர் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் நிர்வாகத்தில் பல்வேறு–அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

அதன்படி அமெரிக்கர்களுக்கே முன்னுரிமை என்ற கொள்கையை கடைப்பிடிக்கும் அவர் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறவும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

ட்ரம்பின் இந்த நடவடிக்கைக்கு பல உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஆனாலும் ஜனாதிபதி ட்ரம்ப் தனது முடிவில் உறுதியாக இருக்கிறார்.

இதையடுத்து நாடு முழுவதும் சட்டவிரோதமாக குடியேறியவர்களை கண்டறிய குடியேற்ற அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் போராட்டம் வெடித்துள்ளது.

குறிப்பாக கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் வன்முறையாக மாறியது.

இந்த வன்முறையை கட்டுப்படுத்த லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கலவரம் நடந்த பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

வன்முறையை கட்டுப்படுத்த இராணுவ வீரர்கள் கண்ணீர் புகை குண்டுகள், ரப்பர் புல்லட் துப்பாக்கிகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறும் போராட்டம் குறித்து செய்தி சேகரிப்பதற்காக அவுஸ்திரேலியாவை சேர்ந்த பெண் ஊடகவியலாளர் லாரன் டோமாசி சென்றிருந்தார்.

அங்கு வன்முறை நடைபெறும் பகுதிக்கு சென்று, அங்குள்ள நிலவரம் குறித்து ஊடகவியலாளர் லாரன் விளக்கிக் கொண்டிருந்தார்.

இதன்போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் ரப்பர் புல்லட் துப்பாக்கியால் லாரனை குறிவைத்து சுட்டார். இந்த சம்பவம் காணொளியிலும் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் குறித்து லாரன் பணிபுரிந்து வரும் தனியார் செய்தி நிறுவனம் அளித்துள்ள விளக்கத்தில், "லாரனும், அவருடன் சென்ற புகைப்படக்கலைஞரும் தற்போது நலமாக உள்ளனர்.

அவர்கள் தங்கள் பணியை தொடர்ந்து செய்து வருவார்கள். போராட்டங்களின்போது முன்களத்தில் நின்று பணியாற்றும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துகளை இந்த சம்பவம் தெளிவாக நினைவூட்டுகிறது.

முக்கிய தகவல்களை வழங்குவதில் செய்தியாளர்களின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை இது உணர்த்துகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -11.06.2025

## மேஷம்

நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் முன்னேற்றமும் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் பெருவீர்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் உண்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு திருப்தியை அளிக்கும். உங்கள் வங்கியிருப்பு வளர்வதைக் காண்பீர்கள்.

அமைதியான அணுகுமுறை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

இன்று ஆற்றலும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். இந்த மன நிலை உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்களிடம் தனிமை உணர்வு காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு எதிராக அமையும்.

உங்கள் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையிடம் அற்ப விஷயங்களில் குறை காண்பீர்கள். நல்லுறவை ஏற்படுத்த சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலிக்கான வாய்ப்பு உள்ளது.

## ரிஷபம்

இன்று திருப்தியற்ற குழப்பமான மனநிலையில் காணப்படுவீர்கள். அதனால் உரிய முயற்சிகள் எடுப்பது கடினமாக இருக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கலாம்.

உங்கள் துணையிடம் சாதரணமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க இது அவசியம்.

இன்று பணப்பற்றாக்குறை கவலையை அளிக்கும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

## கன்னி

இன்று நீங்கள் பதற்றத்துடன் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். உணர்ச்சி வசப்படாமல் அமைதியைப் பராமரித்தால் நற்பலன்களைக் காணலாம். தெய்வீக இசை கேட்பது ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க முடியாது.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மௌனம் கடைபிடிப்பது சிறந்தது.

நிதிநிலைமை இழுபறியாக இருக்கும். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் நிதிநிலையை கண்காணிக்க வேண்டும்.

தோல் ஒவ்வாமை காரணமாக தூக்கம் கெடும். இனிப்பு மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.

## மிதுனம்

இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. ஆன்மீகம் தொடர்பான பயணங்கள் நல்லது. இது அமைதியையும் ஆறுதலையும் தரும்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும். கூடுதல் பொறுப்புகள் ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைப்பது கடினம்.

மன சஞ்சலங்களை எதிர் கொள்ள நேரும். இதனால் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். உரிய நேரத்தில் உணவு உண்ண வேண்டும். கார உணவுகளை தவிர்க்க வேண்டும்.

## துலாம்

இன்றைய நாள் துடிப்பாக இருக்கும். உங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படும். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் இன்று எடுக்கலாம்.

பணியிடத்தில் சமூகமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் இனிமையான தொடர்பு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர்கால பாதுகாப்பு கருதி மணம் சேமிக்கும் வாய்ப்பும் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கும் அளவுக்கு உங்களிடம் ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

## கடகம்

இன்று சாதகமான நாளாக இருக்கும். உங்கள் நெருங்கிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

உங்கள் பணிக்காக மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் திறமை பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.

## விருச்சிகம்

இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பலனைப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடச்சூழல் சீராக இருக்கும். புத்திசாலித்தனத்துடன் நீங்கள் செய்யும் முயற்சிகளில் உங்கள் நன்மதிப்பு உயரும்.

உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் காரணமாக உற்சாகமாக இருப்பீர்கள். இந்த நிகழ்சிகள் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். தேவைப்படும் அளவிற்கு பணம் காணப்படும். திருப்திகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -11.06.2025




இன்று சிறப்பான நாளாக இருக்கும். எதிர்பாராத நன்மைகள் இன்று காணப் படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக் கும். உற்சாகமான வாய்ப்புகள் காணப் படும். பணியைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள்.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். நீங்கள் இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் பயன் பெறக் கூடிய அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சேமிப் பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதி காரணமாக நல்ல ஆரோக்கியத்தை பராமரிப் பீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. கவனமாக மற்றும் உறுதியுடன் உங்கள் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தெய்வீகப் பாடல்கள் மற்றும் ஸ்லோகங்கள் சொல்வது நல்ல பல னைத் தரும்.

பணியிடத்தில் விவேகத்துடன் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படலாம்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க முடியாது. நல்லுறவைப் பின் இத்தகைய உணர்வு களை புறக்கணித்தல் வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. அமைதியாக இருக்க வேண்டும்.




இன்று நீங்கள் வருத்தத்துடன் காணப் படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை நீங்கள் அமைதியாக வைத் திருங்கள். இனிமையான இசையைக்கேட் பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் பதற்றமான சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணி யாற்றுவது சிறந்தது.

உங்களின் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

குடும்பத்துக்காக அதிகம் செலவழிக்க நேரும். அதிகரிக் கும் பொறுப்புகள் காரணமாக நிதிநிலைமையை சாதுர் யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.

பதற்றம் காரணமாக தோள் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது உங்கள் மகிழ்ச்சியை பாதிக்கும். எனவே அமைதி தேவை. பிரார்த்தனை மேற்கொள்ளவும்.




இன்று நல்ல பலன்கள் தரும் சிறப் பான நாள். விட்டுக்கொடுப்பதன் மூலம் நன்மை கிடைக்கும். இன்று நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

இன்று பணியிடத்தில் முன்னேற்றகர மான பலன்கள் கிடைக்கும். சக பணி யாளர்களின் ஆதரவு திருப்தியை அளிக்கும். பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடத்தில் அன்பை வெளிப்படுத்து வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவு காணப் படும்.

இன்று உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக் கும். உங்கள் பணிக்கான கூடுதல் பணம் ஊக்கத் தொகையாக கிடைக்கும்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# ஜனாதிபதி அநுகுமார ஜேர்மன் பயணமானார்



ஜேர்மனி கூட்டாட்சி குடியரசிற்கான விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுகுமார திஸாநாயக்க, நேற்று இரவு கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்.

ஜேர்மனியின் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன் மியரின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க, இன்று முதல் நாளை மறுதினம் வரையில், ஜே ர் மனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி, ஜேர்மனியின் ஜனாதிபதி, சான்சலர், கூட்டாட்சி அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அரச பிரதானிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல் களில் ஈடுபடவுள்ளதுடன், அரசாங்க முன்னுரிமைகளின் அடிப்படையில் வர்த்தகம், இலத்திரனியல் பொருளாதாரம், முதலீடுகள் மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உள்ளிட்ட இருநாட்டினதும் ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தும் புதிய வழிகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெறும் ஜேர்மன் வர்த்தக மற்றும் தொழிற்துறை சபை ஏற்பாடு செய்யும் வணிக மன்றத்தில் இலங்கையின் பொரு ளாதார மாற்றம், முதலீட்டு வாய்ப்புகள், நாட்டின் வளர்ச்சித் திறன் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் புதிய வர்த்தக உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் வலியுறுத்தவுள்ளார்.

மேலும், இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி, ஜெர்மனியின் சுற்றுலா மற்றும் சுற்றுலாத் தொழில் சங்கங்கள் பிரதிநிதிக ளையும் மற்றும் ஜெர்மனியில் வசிக்கும் இலங்கையர்களை யும் சந்திக்கவுள்ளார்.

இவ்விஜயத்தில் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் ஜனாதிபதியுடன் கலந்து கொண்டுள்ளார்கள்.